

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (18.6.2025) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு அரசின் ஏழாவது மாநில நிதி ஆணையத்தின் தலைவர் கே.அலாவுதீன் சந்தித்து. தனது மகன் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.



ஏரல் பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த் – பவித்ரா ஆகியோரது திருமணம் சமீபத்தில் நடைபெற்றதையொட்டி அவர்கள் இல்லத்திற்கு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி நேரில் சென்று வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார். உடன் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ. ராமஜெயம், திருச்செந்தூர் ஒன்றிய செயலாளர் ஏ.பி.ரமேஷ், நகர செயலாளர் வாள் சுடலை, காயல்பட்டினம் நகர் மன்றத் தலைவர் முத்து முஹம்மது உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில்

# பக்தர்கள் வசதிக்காக இரண்டு மின்கல சிற்றுந்துகள்!

## அமைச்சர் அர.சக்கரபாணி தொடங்கி வைத்தார்!

திண்டுக்கல். ஜூன் 19-

அமைச்சர் அர.சக்கரபாணி, பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில், பக்தர்கள் வசதிக்காக இரண்டு மின்கல சிற்றுந்துகள் இயக்கத்தை தொடங்கி வைத்து, பூஜை விவரங்கள் குறித்த மின்னணு திரையை (LED DISPLAY BOARD) திறந்து வைத்தார்.

பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் முதியோர்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பக்தர்கள் எளிதாக மின் இழுவை இரயில் நிலையம், படிப்பாதை, கம்பிவட ஊர்தி நிலையம், சுற்றுலா பேருந்து நிலையம் ஆகிய இடங்களுக்கு சிரமமின்றி செல்வதற்காக கிரிவீதியில் திருக்கோயில் நிர்வாகம் சார்பில் தலா 11 இருக்கைகள் கொண்ட மின்கல கார்கள் 17 எண்ணிக்கையிலும், தலா 23 இருக்கைகள் கொண்ட மின்கல மினி பேருந்து 10 எண்ணிக்கையிலும், டீசல் மினி பேருந்து 2 எண்ணிக்கையிலும் என ஆகமொத்தம் 29 வாகனங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், கண்ணன் இரும்பு எஃகு நிறுவன (Kannappan iron and steel company pvt Ltd.. (Kiscol)) நிறுவனத்தின் உரிமையாளர் பி.எஸ்.டி.கண்ணப்பன் மற்றும் தமிழ்நாடு மெர்க்கண்டையல் வங்கி (Tamil nadu Mercantile Bank) மதுரை மண்டல துணை பொது மேலாளர் டி.கண்ணன் ஆகியோர் பக்தர்களின் வசதிக்காக 23 இருக்கைகள் கொண்ட மின்கல சிற்றுந்து தலா ஒன்று வீதம் இரண்டு வாகனங்களை திருக்கோயில் நிர்வாகத்திற்கு உபயமாக வழங்கியுள்ளனர்.

இந்த வாகனங்கள் இயக்கம் பக்தர்களின் பயன்பாட்டிற்காக உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களால் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் கிரிவீதியில் பக்தர்களின் வசதிக்காக கட்டணமில்லாமல் பயன்படுத்தப்படும் வாகனங்களின் எண்ணிக்கை 31 ஆக உயர்ந்துள்ளது.

மேலும், இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள் குறித்த விவரங்கள்.

இத்திருக்கோயில் தொடர்பான விவரங்கள், கட்டணமில்லா சேவைகள் மற்றும் கட்டண சேவைகள் குறித்து திருக்கோயிலின் மலைக்கோயிலுக்கு பக்தர்கள் செல்லும் படிப்பாதை அடிவாரத்தில் உள்ள பாத விநாயகர் திருக்கோயில் அருகில் 20 அடி நீளம், 10 அடி அகலம் என்ற அளவில் புதியதாக மின்னணு திரை (LED DISPLAY BOARD) திருப்பூரை சேர்ந்த M/s.கேட்ஸ் வேர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் க.ஜெயகுமார் மற்றும் குடும்பத்தினரால் உபயமாக வழங்கப்பட்டு ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு பக்தர்களின் பயன்பாட்டிற்காக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், அறங்காவலர் குழு தலைவர், அறங்காவலர் குழு உறுப்பினர்கள், இணை ஆணையர் / செயல் அலுவலர், துணை ஆணையர், உதவி ஆணையர், திருக்கோயில் பணியாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டனர்.




கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, காணை கிழக்கு ஒன்றிய செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டத்தில் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினார். உடன் மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், காணை கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் கொத்தமங்கலம் B.சந்திரசேகர், காணை ஒன்றிய குழு பெருந்தலைவர் கலைச்செல்வி, மாவட்ட விவசாய அணி துணை தலைவர் சுந்தரமூர்த்தி, மாவட்ட பிரதிநிதி செல்வம், ஒன்றிய துணை செயலாளர் செல்வராஜ், வெண்மணியாத்தூர் பாபு, ஒன்றிய கவுன்சிலர்கள் தேவபூஷணம் முருகன், ஜெயா குமரன், ஊராட்சி மன்ற தலைவர்கள் ரமணன், சிவசங்கர், அறிவழகன், கிளை கழக செயலாளர்கள் முருகதாஸ், ராஜேந்திரன், தேவன், ஜெயக்கொடி, ராஜேந்திரன், ராஜேஷ், ஆரோக்கியதாஸ், ஹரி கிருஷ்ணன், செந்தில், மகளிர் அணி நிர்வாகிகள் அமுதா முருகன், சுமதி மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டத்திற்கு கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கு வருகை தந்த போது வீரபாண்டி பேரூராட்சி சேர்மன் கீதா சசி செங்கோல் பூங்கொத்து கொடுத்தார். உடன் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ . பெரியசாமி. வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச் செல்வன் எம்.பி,. தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., சரவணகுமார் எம்.எல்.ஏ., மகாராஜன் எம்.எல்.ஏ. உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் எல்.மூக்கையா.தீர்மான குழு இணை செயலாளர் ஜெயக்குமார். தேர்தல் பணிக்குழு செயலாளர் செல்வேந்திரன். மாவட்ட துணை செயலாளர் செந்தில் முருகன், ஒன்றிய செயலாளர்கள் ரத்ன சபாபதி, சக்கரவர்த்தி, எல்.எம்.பாண்டியன் கண்ணியம்பட்டி முருகேசன், போடிநகர செயலாளர் புருஷோத்தமன், போடி நகர மன்ற தலைவர் ராஜராஜேஸ்வரி, சங்கர் மருத்துவ அணி மாவட்ட அமைப்பாளர் வைகை ஸ்கேன் பாண்டியராஜ், வர்த்தக அணி மாவட்ட அமைப்பாளர் தெய்வா பால்பாண்டி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் ஆசிப் கான், செஞ்சுரி செல்வம், பேரூராட்சி தலைவர்கள் நாகராஜ், பால்பாண்டி, நடேசன், தமிழ்ச்செல்வி, சௌந்தரபாண்டி, முருகேஸ்வரி, ராமையா மற்றும் கழக நிர்வாகிகள் மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் கே.வி.எஸ் மேல்நிலைப்பள்ளியில் விருதுநகர் நகராட்சியில் நகர நில ஆவணங்களை நவீன மயமாக்கும் திட்டத்தின் கீழ் விருதுநகர் நகராட்சியில் ஆளில்லா வானூர்தியை பயன்படுத்தி நிலஅளவை மேற்கொள்ளும் பணிகளை நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் ப.மதுசூதன்ரெட்டி , மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் , விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் மற்றும் இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கப்பாண்டியன் ஆகியோர் முன்னிலையில் , வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் துவக்கி வைத்து நகர நிலவரித்திட்டத்தின் கீழ் 100 பயனாளிகளுக்கு இணைய வழிப்பட்டாக்களை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் , மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில் , தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கப்பாண்டியன் மற்றும் சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் ஆகியோர் முன்னிலையில் , பட்டாசுத் தொழிற்சாலைகளில் ஏற்படுகின்ற விபத்துகளில் பெற்றோரை இழந்த தொழிலாளர்களின் 41 குழந்தைகளுக்கு ரூ .5.62 இலட்சம் மதிப்பிலான மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை ஆணைகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் வழங்கினார் . உடன் மல்லி ஆறுமுகம் இருந்தார்.



தேனி தெற்கு மாவட்டம் சின்னமனூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட சின்ன ஒவுலாபுரம், காமாட்சிபுரம், அழகாபுரி, உள்ளிட்ட 5 இடங்களில் சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து ரூபாய் 52 லட்சம் மதிப்பில் புதிய உணவு கூடம் அமைக்கும் பணிக்கு கட்டிடம் கட்டும் பணிக்கு கம்பம் சட்டமன்ற உறுப்பினர் கம்பம் ராமகிருஷ்ணன் துவக்கி வைத்தார். அப்பகுதி பொதுமக்கள் தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் சின்னமனூர் ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பிரவீன்குமார் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆண்டாள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, சேந்த நாடு ஊராட்சிக்கு உட்பட்ட இடத்தில் உள்ள அரசுக்கு சொந்தமான இடத்தில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க உரிய இடம் மற்றும் வசதிகள் உள்ளதா என்பது குறித்து சிட்கோ பொது மேலாளர் செல்வகுமார் மற்றும் ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ. ஆகியோர் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டனர்.